**கவனிக்க.-** *28.03.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1857 - 2014 අප්‍රේල් මස 04 වැනි සිකුරාදා - 2013.04.04

*1857 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 588 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 592 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

மஹநுவர கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கென பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. மின்சாரத் தொழிநுட்பவியலாளர் (தெருவிளக்குகள் பொறுப்பாளர் ) தரம் III (ஆரம்பநிலை- குறை தொழிநுணுக்கம்)

**2. சம்பள அளவுத்திட்டம்:**

பொது நிருவாக சுற்றறிக்கை 6/2006 (IV) இல் PL 2-2006 A இற்கமைய ரூ. 12,210-18 × 130- ரூபா 14,550

( இந்த சம்பளத் திட்டத்தின் நான்காவது படியேற்றத்திற்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு)

**03. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்:**

3.1 விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்குக் முன்னரான 03 வருட காலம் மஹநுவர கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

வெற்றிடங்களது எண்ணிக்கையை நிரப்புவதற்குப் போதுமான தகைமை கொண்டவர்கள் நிருவாக எல்லைக்குள் காணப்படாதபோது மட்டுமே அண்டிய பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் வதிவோரது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

3.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச அல்லது ஏதும் மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.

3.4 விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை உடையவராகவும் தீவின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றக்கூடிய பொருத்தமான தேகாரோக்கிய நிலையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

3.5 குற்றவியல் சட்டக்கோவையின் நீதிமன்றம் ஒன்றினால் தண்டனை விதிக்கப்பட்டவராகவோ அரச சேவையிலிருந்து அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பொருத்தமற்றோர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

**04. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:**

**4.1 கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்படக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**4.2 தொழில்சார் தேர்ச்சிகள் /தகவுகள்:**

மின்சாரத் தொழிநுட்ப உதவியாளர் பதவிக்கான தேர்ச்சிகள்/தொழிற் திறமைகளின் கீழ் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

4.2.1 தேசிய தொழிற்தகைமையின் மின் தொழிலாளர் பதவிக்கான மட்டம் 02 (NVQ 2) அல்லது மட்டம் 03 (NVQ3) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.2 தொழினுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) மின் தொழிலாளர்களுக்கான ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல், அல்லது,

4.2.3 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) மின் தொழிலாளர்க்கான ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல். அல்லது,

4.2.4 இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் (VTA) மின் தொழிலாளர்க்கான ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதல் பெற்றிருத்தல். அல்லது,

4.2.5 தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) மின் தொழிலாளர்க்கான ஒரு வருடப் பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

4.2.6 மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு பெற்ற தொழிநுட்பப்பயிற்சி நிறுவனமொன்றின் மின் தொழிலாளர்க்கான ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.

*4.3* **அனுபவம்**:

மின்சாரத் தொழிநுட்பவியல் உதவியாளர் , மின்விளக்கு பொறுப்பாளர் அல்லது அதற்குச் சமமான துறையில் ஆகக் குறைந்தது இரண்டுவருடங்களேனும் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (பயிற்சிச் காலம் குறைந்தது இரண்டு வருடங்களேனும் இருத்தல் வேண்டும்)

*05.* **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்** :

5.1 இப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் கொண்டவை ;

5.2 விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உரிய வகையில் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

5.3 தெரிவு செய்யப்படுவோர் மூன்று வருட கால தகுதிகாண் சேவைக்கு உட்படுவர், அக் காலத்திற்குள் கடமை, வரவு மற்றும் நடத்தை திருப்தியாக அமைந்தால் தகுதிகாண் கால இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கவெனக் கவனத்தில் கொள்ளப்படுவர் ;

5.4 2007.05.28 திகதிய 07/2007 ஆம் இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பின் 05 வருட காலத்திற்குள் சேவையில் இணைக்கப்பட்ட மொழிமூலத்திற்கு மேலதிகமாக அடுத்து அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். இதற்கென அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். ( மட்டம் III இல் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.);

5.5 இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் , தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் மேலதிகமாக அரசாங்கம், மகாண சபை, உள்ளூராட்சித் திணைக்களம், சபையின் செயலாளர் மற்றும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியோர் காலத்திற்குக் காலம் விதிக்கும் விதிகளுக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

5.6 தாபனக் கோவையின் II ஆவது அத்தியாயத்தின் கீழ் ஆட்சேர்ப்புக்குரிய ஏனைய பொது நிபந்தனைகளும் இதற்குப் பொருந்தும்.

5.7 விதிக்கப்படும் பட்சத்தில் மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் நிருவாக எல்லையை வசிப்பிடமாகக் கொள்ளவேண்டி ஏற்படும்.

*06.* **தகுதிகாண் தடை**.- ஆட்சேர்ப்பு வகுப்புக்குரிய சம்பளத்திட்டத்தின் நான்காவது படிக்கு (ரூ.12600/-) இற்கு வருவதற்கு முன்னர் தகுதிகாண் தடை உண்டு. முதல் நியமனத் திகதி முதல் 03 வருட காலத்துக்குள் தகுதிகாண்தடையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு தகுதிகாண் தடையில் சித்தி பெறுதல் கட்டாயமானது.

*07.* **ஆட்சேர்ப்பு முறை**:

7.1. விண்ணப்பித்த அனைவரும் மற்றும் ஆட்சேர்ப்புக்கான தகுதியைப் பெற்றுள்ள அனைவரும் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். குறித்த நேர்முகப்பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களையும் அவற்றின் நிழற்படப் பிரதிகளையும் தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

i. பிறப்புச் சான்றிதழ் மூலப் பிரதி ;
ii. கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் மூலப் பிரதி;
iii. பாடசாலை விடுகைப் பத்திரம் ;
iv. அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;
v. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
vi தொழில் தேர்ச்சிகளைக் காட்டும் சான்றிதழ்;
vii. சேவை /அனுபவச் சான்றிதழ்கள்/கடிதங்கள்;

7.2. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய வீண்ணப்பதாரிகளுள் அதிகூடிய தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளைக் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

*08.* **விண்ணப்பிக்க வேண்டிய முறை**:

8.1 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமைய A4 தாளில் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2014.04.17 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை, அம்பிடிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.(விண்ணப்பப்படிவம் மாத்திரம் அனுப்பி வைத்தல் போதுமானது).

8.3 விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மின்சார தொழிநுட்ப உதவியாளர் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு " எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8.4 பூரணமற்ற தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவை உயர் அதிகாரி அல்லது ரூபா 2,37,060.00 இற்கு மேல் ஆண்டுச் சம்பளம் பெறும் அரச அலுவலர் ஆகியோருள் ஒருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.6 ஏற்கனவே அரச சேவையில் பணிபுரிவோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

9. ஆட்சேர்ப்புச் செய்யப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி என்பவற்றை மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்டகோரளே பிரதேச சபையின் செயலாளர் தீர்மானிப்பார். இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பைத் திருத்தும், இரத்துச் செய்யும் அல்லது இது தொடர்பான எவ்வித இறுதி முடிவையும் மேற்கொள்ளும் அனைத்து அதிகாரங்களும் மஹநுவர கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

டி.கொடிதுவக்கு ,
செயலாளர்,
மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை
பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை
2014, பெப்புரவரி 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

( அலுவலக பாவனைக்கு)

**மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை**

மின் தொழிநுட்பவியலாளர் (தெருவிளக்குகள் பொறுப்பாளர் ) பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   2.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. 2.1 நிரந்தர முகவரி :----.
   2.2 தற்போது அரச சேவையில் உள்ளவராயின் அலுவலக முகவரி :----.
3. 3.1 பிறந்த திகதி : ஆண்டு :----. மாதம்: ----. திகதி:----.
   3.2 2014.04.17 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. தொலைபேசி இலக்கம் :----.
6. ஆண்/பெண்:-----.
7. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளின் விபரங்கள்)
   7.1 கல்வி கற்ற பாடசாலை :----.
   7.2 க. பொ. த. (சாதாரண தரம் ) :-

தோற்றிய வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

7.3 க. பொ. த. (உயர் தரம் ) :-

தோற்றிய வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8. தொழிற் தகைமைகள் :----.

9. சேவை அனுபவம் :-----.

***விண்ணப்பதாரியின் உறுதியுரை :***

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்னரெனின், தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----

***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்***

10. இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் ........................................ (முகவரி) ..........................................................(பெயர்) என்பவரை நான் அறிவேன் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் இன்று அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

---------------------,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.
(பதவி முத்திரை)

உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

***11. அரச சேவை அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோரது விண்ணப்பங்களைக் குறித்த திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் ................................................................................................... என்பவர் இந்த நிறுவனத்தில்/ திணைக்களத்தில் ........................................ஆக பணிபுரிகின்றார். எனவும் கடந்த சில வருடங்களுக்குள் அவர் எவ்விதமான தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உட்பட்டவரல்ல எனவும் சான்றுபடுத்துகின்றேன். குறித்த பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

----------------------------------------------,
அமைச்சு/திணைக்கள/நிறுவனத் தலைவரது கையொப்பம்.

*2014 ————*

***4-22***

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பதுளை மாநகர சபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையைப் பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகர சபைக்கு உரிமையாக்குவதற்கு 2013.09.26 ஆந் திகதியடைய 06 ஆம் இலக்க சபை முடிவின்படி தீர்மானிக்கப்படுகின்றது.*

*2013.11.15 ஆந்திகதிய 1837 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு, சொல்லப்பட்ட கால எல்லைக்குள் அறிவித்ததன்படி, எதிர்ப்பு ஏதும் இல்லாததால் , அந்த வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இங்கு சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகர சபைக்கு உரிமையான பாதையொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிர்வாகம் செய்யப்படுமென்பதை பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*உபாலி நிஸ்ஸங்க குணசேகர,*
*மாநகர பிதா,*
*பதுளை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பதுளை,*
*2014.03.12.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் ஸ்தானம் | முடிவுறும் ஸ்தானம் வரிப்பண இலக்கம் | இடது பக்க வரிப்பண இலக்கம் | வலது பக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மஹியங் கனைப் பாதை 2 ஆம் கிளைப் பாதை | மஹியங் கனைப் பாதை | 163/2 | - | 163/2,163/3, 163/4,163/3/1, 163/6 | 80 | 3.00 |

*4-60*

---

**பதுளை மாநகர சபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர நகர சபைக் கட்டளைச் சட்டத்தின 48 (1) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையைப் பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகர சபைக்கு உரிமையாக்குவதற்கு 2013.11.28 ஆந் திகதியடைய 06 ஆம் இலக்க சபை முடிவின்படி தீர்மானிக்கப்படுகின்றது.*

*2014.02.07 ஆந் திகதிய 1849 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு, சொல்லப்பட்ட கால எல்லைக்குள் அறிவித்திருந்ததன்படி, எதிர்ப்பு ஏதும் இல்லாததால் , அந்த வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இங்கு சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகர சபைக்கு உரிமையான பாதையொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிர்வாகம் செய்யப்படுமென்பதை பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*உபாலி நிஸ்ஸங்க குணசேகர,*
*மாநகர பிதா,*
*பதுளை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பதுளை,*
*2014.03.12.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் ஸ்தானம் | முடிவுறும் ஸ்தானம் வரிப்பண இலக்கம் | இடது பக்க வரிப்பண இலக்கம் | வலது பக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பதுளைப் புகையிரத நிலையப் பாதையின் கிளைப் பாதை | புகையிரத நிலையப் பாதை | 114/15 | 116,114/4, 114/5, 114,/12, 114/24 | 114/1, 61, 114/15, 114/15A, 114/17 | 81.5 | 3.00 |

*4-61*

---

**அப்புத்தளை நகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவு (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (நியம துணை யாப்புக்கள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாணத்தின், உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, அவரால் தாயாரிக்கப்பட்டதும் 2010.10.05 ஆந் திகதி இல.1778/45 எனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி பகுதி IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட, ஊவா மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய வரைபு துணை விதி ஊவா மாகாண சபையினால் 2013.04.04 நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இவ்வரைபு துணை விதியினை, அப்புத்தளை நகர சபையினால் 2013.11.27 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

உபுல் அமரஜீவ திசாநாயக,
தவிசாளர்,
அப்புத்தளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
அப்புத்தளை,
2014.03.18.

*4-198/1*

---

**அப்புத்தளை நகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவு (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (நியம துணை யாப்புக்கள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாணத்தின், உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, அவரால் தாயாரிக்கப்பட்டதும் 2010.11.02 ஆம் திகதி இல.1678/4 எனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி பகுதி IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட, ஊவா மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகள் ஒழிப்புப் பற்றிய பற்றிய வரைபு துணை விதி ஊவா மாகாண சபையினால் 2013.04.04 நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இவ்வரைபு துணை விதியினை, அப்புத்தளை நகர சபையினால் 2013.11.27 ஆம் நாள் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

உபுல் அமரஜீவ திசாநாயக,
தவிசாளர்,
அப்புத்தளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
அப்புத்தளை,
2013.12.13.

*4-198/2*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 04.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.03.2014 |
| | | வெள்ளி | 11.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.03.2014 |
| | | வியாழன் | 17.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.04.2014 |
| | | வெள்ளி | 25.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.04.2014 |
| **மே** | .. | வெள்ளி | 02.05.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.04.2014 |
| | | வெள்ளி | 09.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2014 |
| | | வெள்ளி | 16.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2014 |
| | | வெள்ளி | 23.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2014 |
| | | வெள்ளி | 30.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2014 |
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2014 |
| | | வெள்ளி | 13.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2014 |
| | | வெள்ளி | 20.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2014 |
| | | வெள்ளி | 27.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2014 |

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.